www.padippakam.com

# புதிய நடம்

இதழ் - 2.
நவம்பர் - 1998



தனிச்சுற்று இதழ்

நன்கொடை ரூ.8.00

படிப்பகம்

www.padippakam.com

# பொன் விழாப் பூச்சாண்டிகள்

தோழர்களுக்கு........ வணக்கம்.

தோரணங்களில் ஒட்டப்பட்டு இப்போது குப்பைகளோடு கலந்துவிட்ட மூவர்ணக் கொடிகள் இறைத்த தெருக்களில் நடந்து சென்ற ஆகஸ்ட் தினங்களை நினைவுகூர்ந்து பாருங்கள். பிரமாண்டமான அந்தமான் சிறைச்சாலைக் கட்டிட அரங்கமைப்புகள், பிரமாண்டமான கப்பல் வடிவ மேடைகள், இத்துடன் பிரமாண்டமான நமது சுதந்திரப் பொன்விழா (!)க் கூத்துக்கள்.

நரகாசுரன் உயிரோடு இருக்கும்போது தீபாவளி கொண்டாடுவது எவ்வளவு அபத்தமானதோ அவ்வளவு அபத்தமானது .இங்கு கொண்டாடப்படும் சுதந்திரப் பொன்விழா.

அந்நிய ஏகாதிபத்தியங்களின் பிடிகளிலிருந்து முழுமையாக விடுபட்டு தனது வளர்ச்சியை தானே தீர்மானித்துக்கொள்ளக்கூடிய சமூகமே விடுதலை பெற்ற சமூகம் (நாடு) எனப்படும். அத்தகைய சமூக அமைப்பில் நிலவும் அந்நிய சுரண்டலற்ற, அந்நிய ஆதிக்கப் போக்குகளற்ற வாழ்நிலையே சுதந்திரம் என்றழைக்கப்படும். இந்திய எதார்த்தம் இப்படிப்பட்டதா? என்றால் இல்லை. இந்தியாவின் விவசாய உற்பத்தி முதற்கொண்டு மீன்பிடித் தொழில் வரை வல்லரசு நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்தி முறைகளே இங்கு நிரவுகின்றன.

இந்நிலையில் 1947 - 1998க்கு இடையிலான காலத்தை இந்திய சுதந்திரத்தின் 50 ஆண்டு நிறைவாக ஒரு கருத்தாக்கத்தை இந்திய ஆளும் வர்க்கம் மக்களின் உணர்வு நிலைகளின் மீது திணிக்கிறது. இன்று நேற்றல்ல இந்தியத் தரகு நிலப்பிரபுத்துவ சக்திகள் ஆட்சி அதிகாரத்தைக்கைப்பற்றிய50 ஆண்டுகளாக பல்வேறு தொடர்பு சாதனங்களின் வழியாகவும் (கல்வி, அரசியல், டிவி, சினிமா, பத்திரிக்கைகள்) இதையே வலுக்கட்டாயமாகத் திணிக்க முயல்கிறது. ஐரோப்பிய தொழிலாளி வர்க்கம், 8மணிநேர



படிப்பகம்

www.padippakam.com
வேலைமுறை உரிமையை வென்றெடுத்ததை நினைவுகூறும் விதமாகவும், பாட்டாளிவர்க்க அரசை நிறுவுவதற்கான போராட்டநெறிகளை மென்மேலும் வளர்த்தெடுத்துச் செல்லும் நோக்குடன் மே தினங்களை ஒரு போராட்ட வடிவமாக தொடர்ந்து நடத்திவருகிறது.

ஆனால் இந்தியாவில் பாருங்கள். தவறான கருத்தியல் வழிகாட்டலால் சீரழிந்து இந்திய ஆளும்வர்க்க சேவகர்களாகிப் போய்விட்ட இடதுசாரி திரிபுவாதம் மே தினத்தை என்னவோ பங்குனி உத்திரம்போல வருடா வருடம் கொண்டாடி வருகிறது. தாரை தப்பட்டை என்ன? பேண்டு வாத்தியங்கள் என்ன?

இப்படி அடிப்படையான சக்திகளை இடதுசாரி திரிபுவாதம் எவ்வாறு சீரழிக்கிறதோ அதே வடிவத்தையே ஆளும்வர்க்கமும் கைக்கொள்கிறது. ஒட்டுமொத்தமான மக்களின் உணர்வு நிலையிலும் நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்ற பிரமையைத் தோற்றுவிப்பதன் மூலம் சமூக மாற்றத்திற்கான நடவடிக்கைகளை மழுங்கடித்துவிட முடியும் என்று நம்புகிறது. ஆகஸ்ட் 15ஐ ஒரு தீபாவளியைப்போலாக்கி விடலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்த ஆளும் வர்க்கத்தின் முகங்களில் எண்ணெய் வழிந்ததை நாம் கண்டோம். சுதந்திரப்பொன்விழா அரசின் சம்பிரதாயமான விழாவாக இருந்ததே தவிர ஒட்டுமொத்த மக்களும் தெருவிலிறங்கி கொண்டாடும் உணர்வுப்பூர்வமான விழாவாக அது கொண்டாடப்படவில்லை. கொண்டாடப்பட முடியாது. ஏனெனில் நமது விலங்குகளை உடைத்தெறிய வேண்டிய நிர்ப்பந்தமும், சமூக மிருகங்களை அப்புறப்படுத்த வேண்டிய தேவையும் நமக்கிருக்கிறது. அதன் பின்தான் விடுதலை, சுதந்திரம், ஜனநாயகம் என்பதற்கான சரியான அர்த்தங்களை வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் நாம் அனுபவிக்க முடியும். சுதந்திரம் என்பது தனது தூதரகத்தில் குண்டு வெடித்ததற்காக ஒரு நாட்டின் மீதே குறிவைத்து ஏவுகணையால் தாக்கும் உலக போலீசின் ஜனநாயகம் போன்றதல்ல.

**தோழமையுடன்**

**புதிய தடம்.**



படிப்பகம்

# சரிகாஷா

www.padippakam.com

## (ஒரு இளம் பெண்ணின் (அ) சாதாரண மரணம்)

குமரன்தாஸ்

கல்லூரி மாணவி சரிகா ஷா வின் மரணம் நிகழ்ந்த விதம் மிகவும் சாதாரணமானது. அதாவது தலையில் ஏற்பட்ட காயம்.

ஆனால் அந்தக் காயம் பட்ட விதம் அசாதாரணமானது. சில உதிரிவர்க்க பொறுக்கிகளின் விபரீத விளையாட்டு இறுதியில் அவளின் மரணத்திற்கு காரணமானது. அவர்கள் கொலை வெறியர்களா? அவர்களை அந்தக் கொலைக்குத் தூண்டியது எது? மனித குலத்திற்கே எதிரான ஆணவ, ஆதிக்க வெறியில்லாமல் வேறு எது? தாங்கள் ஆண்கள் என்கிற ஆணவம் (கும்பலாக சேர்ந்துள்ளதால்) பலம் வாய்ந்தவர்களாக இருக்கிறோம் என்கிற ஆதிக்க மனோபாவம், கட்சியின் மாணவர் அமைப்பு என்கிற அதிகாரத் திமிர்.

அத்தகைய ஆணவ, ஆதிக்க, அதிகார திமிர் பிடித்த மனோபாவத்திற்கு தினமும் சாலைகளில், வீடுகளில் வாகனங்களிலும், பள்ளியிலும், அலுவலகங்களிலும் பெண்கள் நடமாடும் எல்லா இடங்களிலும் எத்தனையோ சரிகா ஷாக்கள் உடலாலும், உள்ளத்தாலும் கொல்லப்படுகிறார்கள், கொளுத்தப்படுகிறார்கள். காரணம் இங்கு நிலவும் நிலப்பிரபுத்துவ ஆதிக்கக் கூறுகளைக் கொண்ட பண்பாட்டுச் சூழலில் இவை பெரிய குற்றங்களாகவோ, பண்பாடற்ற செயலாகவோ தெரிவதில்லை. மாறாக இத்தகைய செயல்கள் வீரத்தின் வெளிப்பாடாக பகட்டப்படுகிறது.

அவற்றில் இங்கு உள்ள மீடியாக்களின் பங்கு பிரதானமானது. முன்பு இலக்கியம், நாடகம், நேற்று சினிமா, வானொலி, இன்று தொலைக்காட்சி. உலகம் முழுவதுமே இன்று முற்போக்கு சக்திகளின் வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதால், இத்தகைய நிலப்பிரபுத்துவ ஆதிக்கக் கருத்துக்கள் உரம்பெற்று வருகிறது. பஞ்சாப் மாநில முன்னால் காவல் துறை தலைவர் கில் முதல் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் வரை பாலியல் குற்றங்களில்



படிப்பகம்

ஈடுபட்டுள்ளதற்குக் காரணம் இத்தகைய [illegible] வளர்ந்து கொண்டிருப்பதுதான்.

www.padippakam.com

இத்தகைய ஆதிக்க, அதிகார திமிருக்கு ஆண் - பெண் வேறுபாடு இல்லை போலும். ஏனெனில் நாம் இங்கு அத்தகைய பெண்களையும் பார்க்க முடிகிறது. இதற்கு நல்ல உதாரணம் சென்னை பெண் வக்கீல்கள் சங்கத்தின் செயல்கள். மேலும் உதாரணம் தேவையெனில் அன்றைய மகாராணிகளை நினைவுபடுத்திக் கொள்ளலாம். வளர்ச்சி எளிதில் விளங்கும்.

18 ஆம் நூற்றாண்டின் முதலாளித்துவ முற்போக்கான குணாம்சங்களை மறுத்து, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏகாதிபத்தியமாக மாறிய முதலாளித்துவம், காலனிய நிலப் பிரபுத்துவத்துடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டின் விஷ வளர்ச்சியின் உச்சகட்டம் இது. இந்த விஷ வளர்ச்சி இந்தியாவில் தமிழகத்தில் சரிகாஷாவின் மரணத்தினைத் தொடர்ந்து அரசு எடுத்த நடவடிக்கையில் உள்ள விஷத்தன்மையை பாருங்கள். ஏற்கனவே இங்கு அதிகாரக் குவியலுக்கும், ஆதிக்க வளர்ச்சிக்கும் ஒவ்வொன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது அது மீடியாவாக இருந்தாலும் சரி, அணுகுண்டாக இருந்தாலும் சரி. ஏற்கனவே சீரழிக்கப்பட்டுள்ள இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைப் போக்க இயலாததால் அணுகுண்டு வெடித்து பூதம் காட்டி, அதற்கு அமெரிக்கா ஏவிவிட்டுள்ள பொருளாதாரத் தடை என்னும் பிசாசு பற்றிப் பிதற்றி அந்தப் பூதமும், பிசாசும்தான் நம் வாழ்க்கை நெருக்கடிகளுக்குக் காரணம் என்றும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ள புண்ணியம் செய்திருக்க வேண்டும் எனவும் போதிக்கப்படுகிறது.

அணுகுண்டைப் போலவே சில மரணங்களையும் பயன்படுத்திக் கொண்டு, மக்கள் வேட்டையில் இறங்கியுள்ளது அரசு. கருப்புச் சட்டங்களும் அமல்படுத்தப் படுகின்றன. இம்மாதிரியான மரணங்களைப் பயன்படுத்தி மக்களை கைதிகளைப் போல் பண்டைய கிரேக்க அடிமைகளைப் போல் கண்காணிக்க மக்களிடையே அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்கிறது.

சட்டம் ஒழுங்கைக் காக்கும் இவர்களின் காவல்திறமை அண்ணாமலை



படிப்பகம்

www.padippakam.com

நகர் முதல் வாச்சாத்தி வரையிலும் மட்டுமின்றி பஞ்சாப் காவல் துறை முன்னால் தலைவர் தட்டிய இடம் வரையலும் பிரகாசிக்கின்றது. இந்நிலையில் மாணவி சரிகா ஷாவின் மரணத்திற்குக் காரணமான ஆணவ ஆதிக்க, அதிகாரத் திமிருக்கு எதிரான போராட்டங்களைக் கட்டமைப்பதே மேலும் இத்தகைய மரணங்கள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தும்.

## பெண்களின் நிலையும் போராட்டமும்

நீதா

மாறிவரும் இன்றைய நவநாகரீக உலகில் பெண்களின்நிலை எவ்வாறு உள்ளது. மூன்றாம் உலக நாடான இந்தியாவில் மட்டுமின்றி, அமெரிக்கா போன்ற வளர்ந்த வல்லரசுகளில் கூட பெண்கள் பலவித பாலியல் பலாத்காரங்களுக்கும், வன்முறைகளுக்கும் ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கு சமீபத்தியதோர் எடுத்துக்காட்டு அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் மேல் நாளொரு வண்ணம் எழும் பாலியல் வழக்குகளாகும்.

நம் நாட்டிலும் இப்படிப்பட்ட பெரிய மனிதர்கள் இருந்தாலும் நம் பெண்கள் இன்னும் அவமான உணர்ச்சிகளில் (கற்புநெறி நம்பிக்கையில்) இருந்து விடுபடாததால் அவை வெளியே தெரிவதில்லை. சமீபத்தில் நம் மனத்தை உலுக்கிய மாணவி சரிகா ஷாவின் மரணம் கூட பட்டப்பகலில், நட்டநடு ரோட்டில் நிகழ்ந்ததால்தான் வெளியே தெரிந்ததே தவிர ஏதாவது ஒரு கல்லூரிக் காம்பவுண்டில் நாலு சுவர்களுக்குள் நடந்திருந்தால் அப்படியே மறைக்கப்பட்டிருக்கும் அல்லது அக்குற்றம் திரிக்கப்பட்டிருக்கும்.

இதுமட்டுமின்றி இன்னும் எத்தனையோ பெண்கள் பஸ்ஸிலும், கல்லூரிகளிலும், அலுவலகங்களிலும் சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கு ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.பள்ளி செல்லும் சிறுமி ஒருத்தி



படிப்பகம்

வேன்டிரைவர்களின் சீண்டுதலுக்குப் பயந்து தூக்க மாத்திரைகளை விழுங்கி உயிர்பிழைத்த சம்பவமும் நம் சுதந்திர(?) திருநாட்டில்தான் நடந்துள்ளது. பால்மணம் மாறாத சிறுமிகளைப் பாலியல் பலாத்காரங்களுக்கு ஆளாக்கும் நிலையும் தற்போது அதிகரித்து வருகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இந்த மாதிரியான அவலநிலை தொடர்வதற்கான காரணம் என்ன? என ஆராய்ந்தால் அதன் பின்னணியில் நமது சமூக வாழ்நிலை இருப்பது புரியும். இந்தியாவில்முதலாளியம் தோன்றாததால் நிலப்பிரபுத்துவம் அழிக்கப்படவில்லை. அதற்கு மாறாக பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்துடன் நிலப்பிரபுத்துவம் கூட்டுச் சேர்ந்து அதற்குத் தகுந்தாற் போல் தனது பொருளாதார முறையை மாற்றி அமைத்து புதிய தரகு முதலாளியம் என்ற பாதையில் பயணிக்க ஆரம்பித்தது. இதனால் உண்மையான முதலாளித்துவ சமூக வாழ்வியலை பெண்களின் சிந்தனையிலோ, பண்பாட்டிலோ அது ஏற்படுத்தவில்லை. இன்றும் நம்முடைய சமூகம் அடிப்படையில் புனரமைக்கப்பட்ட நிலப்பிரபுத்துவ வாழ்க்கை முறையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அந்நிய ஏகாதிபத்தியத்தின் வருகை காரணமாகத் தோன்றிய தரகு முதலாளியத்தின் தேவைக்காகப் பெண்கள் கல்வி, வேலை வாய்ப்புகளில் பங்கேற்கும் நிலை ஏற்பட்டது. இங்கனம் நிலப்பிரபுத்துவம் அழிக்கப்படாமல் முதலாளித்துவம் நேரிடையாகத் தோன்றாமல் தரகு முதலாளிய அம்சங்கள் தோன்றி வளர்ந்ததால், பெண்கள் போகப் பொருளாகப் பார்க்கப்படும் அடிப்படை சமூகப் பண்பும், சிந்தனையும் மாறாமல் அதே சமயம் இறக்குமதி செய்யப்பட்ட நவீனமய வடிவங்களுடன் சேர்ந்து ஒரு புதிய கலவைப் புண்பாடு தோன்றி வளர்ந்து வருகிறது.

இதற்கு உதவியாக முன்னேறிய அறிவியல் சாதனங்களான டி.வி., சினிமா போன்றவையும், அதிநவீன இண்டர்நெட் போன்ற சாதனங்களும் தம் பங்கிற்கு பெண்களை இழிவுபடுத்தும் செயலைச் செய்கின்றன.



www.padippakam.com
படிப்பகம்

இன்றைய சினிமாவை www.padippakam.com எடுத்துக் கொண்டால் அதில் வரும் கதாநாயகன் பேண்ட், ஷர்ட், பனியன், ஷூ என்று முழு உடையுடன் இருப்பான். ஆனால் கதாநாயகியோ, அது குளிர் கொட்டும் இமயமலை அடிவாரமாக இருந்தாலும் டூ பீஸ் உடையில்தான் இருப்பாள். சூழ்நிலைக்கே பொருந்தாத இதைப்பற்றிக் கேட்டால் கனவு சீன் என்று சப்பைக்கட்டு கட்டுவார்கள். இதற்கு உறுதுணையாக சின்னத்திரையும் தம் பங்கிற்கு ஆண்கள் உபயோகப்படுத்தும் பனியன், ஜட்டி, டீ ஷர்ட், பிளேடு, ஷேவிங் லோஷன் போன்ற விளம்பரங்களில் சம்பந்தமே இல்லாமல் அரைகுறை ஆடையுடன் ஒரு பெண்ணைப் புகுத்தி விடுவார்கள். உதாரணத்திற்கு **ZeeTalk** என்ற பெயர் கொண்ட ஆண்கள் மாத்திரமே உபயோகிக்கக் கூடிய பவுடர் விளம்பரத்தில், அதனை போட்டுக் கொண்டு செல்லும் ஒரு கட்டுமஸ்தான ஆணின் பின்னால் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று பெண்கள் மயங்கிப் பின் தொடர்வதாக விளம்பரம் செய்துள்ளார்கள். இவ்வாறு கேவலம் ஒரு பவுடருக்கு மயங்கும் பெண்கள் கூட்டம் எங்கு இருக்கின்றது என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்ததாகப் பத்திரிக்கையை எடுத்துக் கொண்டால் 100க்கு 90சதவீதப் பத்திரிக்கைகள் நடிகைகளின் கவர்ச்சி அட்டைப்படங்கள் இல்லாமல் வெளிவருவதில்லை. பெண்களுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கூறிக் கொள்ளும் சில பத்திரிக்கைகள் அதை ஒட்டியே அரை நிர்வாணப் படங்களை வெளியிடுகின்றன. இன்னும் சில பத்திரிக்கைகள் ஒருபடி மேலே போய் ஒருவன் ஒரு பெண்ணை எவ்வாறு பாலியல் பலாத்காரம் செய்தான், கொலை செய்தான் என்று மிகவும் விரிவாகப் படங்களுடன் எடுத்துக்கூறி அதைப் பற்றித் தெரியாதவனுக்குக் கூடக் கற்றுத் தரும் பாடப்புத்தகமாக விளங்குகின்றன. என்னுடன் உறவு கொள்வதற்கு இந்த நம்பருக்கு டயல் செய்யுங்கள் என்று அரைகுறை ஆடையுடன் ஒரு பெண்ணின் விளம்பரம் ஒரு பத்திரிக்கையில் வருகின்றது. அதைத்தவிர குளியல் ஸ்பெஷல், முத்த



படிப்பகம்

www.padippakam.com

ஸ்பெஷல், தழுவல் ஸ்பெஷல் என்று தனிப் பகுதிகள். இவையெல்லாவற்றையும் விட மிகவும் முன்னேறிய அறிவியல் சாதனமான இன்டர்நெட் மூலமும் பலவிதமான செக்ஸ் வக்கிரங்கள் உலகில் வலம் வரத் தொடங்கியுள்ளன. இவ்வாறு சினிமா, டி.வி. பத்திரிக்கை என்ற அனைத்துத் தகவல் தொடர்பு சாதனங்களும் போட்டி போட்டுக் கொண்டு பெண்களை இழிவு படுத்தும் பணியில் இறங்கியுள்ளன.

இன்று நேற்றல்ல நம் நாட்டில் இதிகாச காலத்தில் இருந்தே பெண்களை இழிவுபடுத்தும் பெண்ணடிமைத்தனம் நிலவி வருவதைக் காணலாம். இராமாயணத்தில் சீதைக்கும், மகாபாரதத்தில் பாஞ்சாலிக்கும் நேர்ந்த, ஏற்பட்ட அவலங்கள் நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் அதற்குக் காரணமான இராமனையோ, பாண்டவர்களையோ யாரும் தட்டிக் கேட்கவில்லை, தண்டனை தரவுமில்லை. பெண் தனக்கு (கணவனுக்கு) அடிமை என்ற கோட்பாட்டின்படி நடத்தப்பட்ட இந்த அவலங்கள் முழுமையான நிலப்பிரபுத்துவ சிந்தனையின் விளைவே ஆகும்.

இப்பொழுது இந்த அறிவியல் உலகத்திலும் நடந்து வரும் பாஷன் ஷோ, அழகிப் போட்டி போன்றவையும் இந்தியப் பாரம்பரியப் பண்பான பெண்களை போகப் பொருளாகப் பார்க்கும் பார்வையின் தொடர்ச்சியாய் மேலை நாட்டுச் சீரழிவும் வந்து இணைந்ததின் வெளிப்பாடே ஆகும். போட்டி நடத்துபவர்கள் என்னதான் நாங்கள் அறிவையும் சோதிக்கிறோம் என்று கூறினாலும் பிரதானமாக நடப்பது அழகிகள் தங்கள் நடையின் நளினத்தைக் காட்டும் கேட் வாக் மற்றும் தங்கள் உடல் அமைப்பினை வெளிப்படையாகக் காட்டும் நீச்சலுடைப் போட்டிகளே ஆகும். இதற்கும், அறிவுக்கும் என்ன சம்பந்தம் என்று அங்கு அமர்ந்து இருக்கும் மேல்தட்டுப் பெரிய மனிதர்களுக்கேத் தெரியும்.

இத்தகைய அழகிப் போட்டி, மற்றும் மீடியாக்களின் பெண் இழிவுப் பிரச்சாரத்திற்கான காரணம் என்ன? இத்தகைய சீரழிவுகள் ஏதோ அந்நிய



படிப்பகம்

நாட்டு ஆதிக்கத்தின் மூலமாகத்தான் ஏற்பட்டது என்று நாம் எண்ணிவிடக் கூடாது. நான் மேலே சொன்னபடி இதிகாச காலத்திலிருந்தே இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு விஷயமாகும். ஆனால் வடிவங்கள் வேறுபட்டிருந்தது.

www.padippakam.com

ஒரு நாட்டில் நிலவும் பண்பாட்டிற்குக் காரணம் அதன் சமூக, பொருளாதார அடித்தளமாகும். அதேபோல் பண்பாட்டில் நிலவும் மாற்றத்திற்கும் அந்த அடித்தளத்தில் ஏற்படும் மாற்றமே காரணமாகும். பொதுவாக நிலப்பிரபுத்துவ சமூகத்தில் முதலாளியம் தோன்றி வளரும் போது தனது வளர்ச்சியை தேவையை முன்னிட்டு உழைப்பை சமூகமயமாக்குகிறது. இந்த சமூகமயமான உழைப்புத்தான் தொழிலாளி வர்க்கத்தை பாட்டாளி வர்க்கமாக மாற்றியது. மேலும் குடும்பத்திற்குள் மட்டுமே முடங்கிக் கிடந்த பெண்களை கல்விகற்கவும், உழைப்பில் ஈடுபடவும், அதிகாரத்தில் பங்கேற்கவும் வாய்ப்புக்களை ஏற்படுத்தியது. இவை அனைத்தையும் அது பெண்களின் உண்மையான சனநாயகச் சுதந்திரத்திற்காகச் செய்யாமல் தனது பொருளாதாரத்தை மேலும், மேலும் பெருக்கிக் கொள்வதற்காகவே செய்கிறது. இவ்வாறு பெண்களின் வாழ்நிலையில் ஏற்படும் மாற்றமானது அவர்களின் சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

அதாவது ஆணைச் சார்ந்திருந்த பெண், இந்தப் பொருளாதாரச் சுதந்திரத்தின் காரணமாக ஆணாதிக்க ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபட்டு, ஆண் - பெண் சமத்துவத்தைக் கோருகிறாள். அதை மறுக்கும் நிறுவனமாகக் குடும்பம் இருக்கவும் அதனை எதிர்த்துப் போராடும் எண்ணம் வலுப்பெறுகிறது. நிலப்பிரபுத்துவ குடும்ப அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்திய முதலாளிய சமூகம் ஆண் - பெண் சமத்துவம் ஏற்படாதவாறு சொத்துடமையையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், பெண்ணின் உழைப்புக் குடும்பத்தில் சுரண்டப்படுவதையும் மறுக்காமல், மாற்றாமல் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே, சோஷலிச காலகட்டத்தில்தான் ஆண் - பெண் சமத்துவம் உண்டாகும் என்று பாட்டாளி வர்க்கம் போராடுகிறது.



படிப்பகம்

ஒரு காலத்தில் வறுமையைப் பயன்படுத்தி பெண்களை பலாத்காரத்திற்கு

www.padippakam.com

ஆளாக்கிய சமூகம் இன்று அந்நிய ஏகாதிபத்தியப் பொருட்களின் மேல் பற்றுதலை நுகர்வு வெறியை உண்டாக்கிப் பெண்களை இழிவுபடுத்துகிறது. பெண்கள் தாமாகவே விளம்பரப் படங்களுக்கு மாடலாக விரும்பி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை நியாயப்படுத்தும் விதமாக பெண் விடுதலைக் கருத்தியலை தவறான வழியில் திசை திருப்பி ஆண்-பெண் சமத்துவம் என்ற பெயரில் ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண் ஆதிக்கம் என்பதாகவோ ஆணின் பாலியல் சீரழிவுக்குப் பதிலாகப் பெண்ணின் பாலியல் சீரழிவு (ஹோமோசெக்ஸ் - லெஸ்பியன்) என்பதாகவோ முன்வைக்கப்படுகிறது. இது சாராம்சத்தில் நிலப்பிரபுத்துவ சனநாயக ஒடுக்குமுறையை நிலை நிறுத்தும் செயற்பாடாகவே உள்ளது.

தரகு முதலாளிய வளர்ச்சியில் தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட சில மேல் வர்க்கப் பிரிவுப் பெண்கள் தாம் அடைந்துள்ள அரசியல், பொருளாதார, அதிகார வளர்ச்சியை முன்னிறுத்தி தாங்கள் சனநாயக விடுதலை அடைந்துள்ளதாக நினைக்கின்றனர். அதனால்தான் இவர்கள் தாம் அடைந்துள்ள சீரழிவுச் சனநாயகத்தை உண்மையென்று நம்பி ஏதோ கிராமப்புறங்களில் இருக்கும் பெண்கள் மாத்திரம் அறியாமை, பொருளாதாரச் சுதந்திரம் காரணமாக கொடுமைகளுக்கு ஆளாவதாகவும் படித்து வேலைக்குச் செல்லும் நகர்ப்புறப் பெண்கள் ஏதோ சுதந்திரம் அடைந்துவிட்டதாகவும் கூறுகின்றனர்.

நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான பெண்களின் சனநாயக விருப்பம் வரவேற்கத்தக்கதே. ஆனால் அச்சனநாயகத்தை இன்று நிலவும் புனரமைக்கப்பட்ட தரகு முதலாளிய சமூக அமைப்பிற்குள்ளாகவே உருவாக்க முடியும் என்ற தவறான கருத்தைக் கொண்டிருக்கின்றனர். இதற்கு மாறான உண்மையான முதலாளிய சனநாயக சமூக மாற்றத்திற்கான போராட்டத்துடன் இணைக்கப்படும் போதுதான் பெண்களின் சனநாயகத்திற்கான போராட்டம் ஆண் - பெண் சமத்துவத்தைச் சென்றடைவதற்கான் வழி திறக்கும்.



படிப்பகம்

# வாசிக்க கிடைத்த கவிதை

www.padippakam.com

மு. மல்லன்

பள்ளக்குடி பன்றிகள்
வெள்ளாமையை அழிப்பதாக
வேல்க்கம்போடு வந்தார்கள்
நீர்க்கருவைக் காட்டுக்குள்
குத்துகின்ற வெறியோடு
மனிதர்கள் துரத்த -
வீர் வீரென குத்துப்பட்டும் ஓடின
பிழைப்பதற்காக.

பீத்தின்றும் கூட
பிழைக்க விட மாட்டேன்கிறானே
-ஏதோ ஒன்று நினைத்திருக்கும்.
நாம் தின்னும் பீமேலே
இவனுக்கென்ன பொறாமை
-ஏதோ ஒன்று சினந்திருக்கும்.

பீவண்டாகவாவது
பிறந்து தொலைத்திருக்கலாம்
-ஏதோ ஒன்று நொந்திருக்கும்.

பீத்தின்ற வாயோடு-
இரத்தம் கக்கிய உடலோடு
ஆங்காங்கே...
ஒருச்சாய்ந்து கிடந்தன சாவோடு.

சுடலைக்கு நேர்ந்துவிட்ட பன்றி
குத்து வாங்கி ஓடியாந்து
முற்றத்தில் துடிதுடிப்பதை...
வெளியில் இருந்து பார்த்தன
அதன் குடல்கள்.

இரண்டு குட்டி ஈன்ற பன்றி
கடைக்குட்டியைத் தின்று
ஒன்று வளர்த்தது செல்லமாய்.

வதையுண்ட தாய்ப்பன்றியின்
குத்துப்பட்ட புழைவழியே
மனித மலம் வழிய...
பாலும் குடித்தபடி-
மலமும் சுவைத்தபடி-
அதன் செல்லக்குட்டி.

(நன்றி - தலித், ஆகஸ்ட் 97)



படிப்பகம்

www.padippakam.com

# கடலில் மூழ்கும் தொழில்

— கலியுகன் —

மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. இறால் விலை சரிவு, மீனவர்கள் வேலைநிறுத்தம் இப்படிச்செய்திகள் பத்திரிக்கைகளில் வருவது சமீப நாட்களாக அதிகரித்து வருவதை நாம் பார்க்கிறோம், படிக்கிறோம், இவை நம்மை கவலை கொள்ளச் செய்கின்றன.

இந்தத் தொழிலின் தற்போதைய தன்மையையும் அதனால் வரும் நெருக்கடிகளையும் இவைளில் இருந்து விடுபட்டு சீரான வளர்ச்சியுடன் இந்த தொழிலை நடத்த வழியென்ன? என்ற கேள்வி நம்முன் எழுகிறது.

இராமேசுவரம் பகுதியில் மீன்பிடித்தொழிலில் இறால் மீன் பிடிப்பிற்கே முக்கியத்துவம் தரப்பட்டு ஆண்டு முழுவதும் இறால் கணிசமான அளவில் பிடிக்கப்படுகிறது.

இவ்வாறு பிடிக்கப்படும் இறால் ஜப்பான் போன்ற அந்நிய ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கே பயன்கடுகிறது. இந்த இறாலை உள்ளூர் மற்றும் உள்நாட்டு மக்கள் வாங்கி உண்பது மிக் அரிது ஏனென்றால் 1 கிலோ முதல்தரமான இறாலின் விலை ரூ.540 என்பதோடு உடல் நலத்தை முன்னிட்டும் யாரும் தொடர்ந்து உண்பதில்லை.

ஆனால் நமது மக்கள் சாப்பிடும் சாதாரண மீன் வகைகளை பிடிப்பதைக்காட்டிலும் லாபம் கூடுதலாக வருகிறது என்பதாலேயே இறால் மீன்பிடித்தொழிலாளர்கள் படும் இன்னல்கள் பல. இலங்கை கடற்படையின் தாக்குதலுக்கு ஆளாவதும் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாபவதும் அன்றாட நிகழ்ச்சியாக உள்ளன. பல நேரங்களில் படகுகள் சேதப்படுத்தப்படுவதும் மீன்வலைகள் இறாலுடன் இலங்கை கடற்படையால் அபகரித்துச் செல்லப்படுவதும் நடக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

சில சமயங்களில் நமது மீன்பிடி தொழிலாளர்கள் இலங்கை இராணுவ கடற்படையால் சிறைப்பிடிக்கப்படுவதும் உண்டு.

இவ்வாறு சிறைப்பட்ட மீனவத் தொழிலளார்களின் குடும்கங்கள் இங்கு கண்ணீரும் புலம்பலுமாக நிற்கின்ற காட்சிகளும் தினசரிகளில் வெளிவருகின்றன. இதற்கெல்லாம் காரணம் என்ன? அந்நிய ஏகாதிபத்திய நாடுகளின் தேவைக்கான உயர்தர இறால் பிடிக்க வேண்டும் என்பதற்காக நமது கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவதன்றி வேறென்ன?

இராமேசுவரம் பகுதியில் மீன்பிடிப்பு என்பது பல விதங்களில் நடைபெறுகிறது. கட்டுமரம், நாட்டுப்படகு (வத்தை, தோணி), கரைவலை, எந்திரப்படகு (போட்டு (அ) லாஞ்ச்) என்ற முறையில் நடைபெறுகிறது. இவற்றில் எந்திரப்படகு அல்லது வாஞ்சங என்ற நவீன முறை தவிர மற்றவை எல்லாம் உள்ளூர் மற்றும் மாவட்டங்கள் அளவிலான மக்களின் தேவைக்கான மீன்வகைகளையே பிடிக்கின்றன. லாஞ்ச் என்ற விசைப்படகு என்பதுதான் வெளிநாட்டு ஏற்றுமதியை நம்பி இறால் பிடிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

கட்டுமரம், நாட்டுப்படகு போன்ற பின் தங்கிய மீன்பிடித் தொழில்கள் நசிந்தும் விசைப்படகுகள் எண்ணிக்கையில் பெருகிக் கொண்டும் வருகின்றன. இதை உட்டி விசைப்படகு மீனவத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

ஆனால் அதிகரித்துவரும் எந்திரப்படகுகள் இறால்பிடிப்பிற்கே முக்கியத்துவம் தருவதால் உள்ளூர் மக்களின் தேவைக்கான மீன் கிடைக்காமல் தட்டுபடபாடு ஏற்பட்டு ஒரு நேரத்தில் கிலோ 15ருபாய்க்கு விற்ற மீன் இன்று 60 ருபாய் வரை விற்கப்படுகிறது. சமயத்தில் அதற்கும் கடுமையான போட்டி நிலவுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இதே மீன் வகைகள் நமது பக்கத்து மாவட்டங்களுக்கு வியாபரிகள் மூலமாக இங்கிருந்து வாங்கிச் செல்லப்பட்டு 1கிலோ ரூபாய் 100 வரை விற்கப்படுகிறது.

இவ்வளவு தூரம் டிமாண்டு இருந்தும் கூட விசைப்படகு உரிமையாளர்கள் இறாலுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மற்ற மீன்களுக்கு கொடுப்பதில்லை. அவ்வாறு கொடுக்கப்படுமேயானால் உள்ளூரில் மட்டுமல்லாமல் பிற மாவட்ட மக்களுக்கும் கூட குறைந்த விலையில் மீன் கிடைக்க வழியேற்படும்

ஆனால் விசைப்படகு உரிமையாளர்கள் கூறும் காரணமான போட் ஒருமுறை மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுவர ஆகும் டீசல் செலவு மற்றும் இதர செலவுகள் அதிகமாக இருப்பதால் இறால் பிடித்தால்தான் கட்டுப்பிடியாகும் என்ற வாதம் சரியானதில்லை. ஏனென்றால் இறாலைத் தவிர இதல மீன் பிடிக்க அவ்வளவு அதிக தூரம் கடலுக்குள் செல்ல வேண்டியதில்லை. மேலும் லாஞ்ச் வேகத்தை தேவைக்கதிகமாக அதிகரிப்பதால் வரும் டீசல் செலவு, இலங்கை இராணுவத்தால் ஏற்படும் நஷ்டம் போன்றவற்றை கணக்கிட்டுப் பார்த்தால் இவ்வாதம் பொய்யானதாகிவிடுகிறது.

இவை எல்லாவற்றையும் விட பல்வேறுகாரணங்களால், நம்மிடம் இறாலை வாங்கிக் கொண்டிருக்கக் கூடிய வெளிநாடுகள் எங்களுக்கு இறால் வேண்டாம் என்று திடீரென நிறுத்திவிடும்போது இங்கு பிடிபட்ட இறால் முழுவதும் ஏற்றுமதி செய்ய வழியின்றி தேங்கிப்போவதுடன் விசைப்படகுகள் மீன்பிடிக்க செல்லாமல் பலநாட்கள் கரையில் நிறுத்திவைக்கப்படுகின்றன. மறுபடியும் வெளிநாட்டு ஏகாதிபத்திய கம்பெனிகள் இறால் வாங்க துவங்கும் வரை வேலையின்றி தவிக்கும் பல ஆயிரம் (மீன் பிடி) தொழிலாளிகள் பட்டினி



படிப்பகம்

www.padippakam.com

கிடக்க நேரிடுகிறது. அது போலவே ஒரு விசைப்படகு வைத்துக் கொண்டு பல ஆயிரம் கடன் பட்டிருக்கும் பல உரிமையாளர்களும் வட்டி கட்ட முடியாமல் நெருக்கடிக்குள்ளாகின்றனர். இவையெல்லாம் ஏன்? இவ்வளவு பெரிய இந்தியச் சந்தையின் தேவையை பெரிதாக நினைக்காமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் லாபம் (கமிசன்) பெறும் தரகு கம்பெனிகளைச் சார்ந்தே நிற்பதால் தானே இந்த நெருக்கடி.

சமீப காலத்தில் கூட இந்திய அரசு அணுவெடிச்சோதனை செய்ததை முன்னிட்டு ஜப்பானிய அரசு நமது நாட்டு இறாலை அணுக்கதிர் வீச்சால் விஷத்தன்மை கொண்டது என்று சொல்லி வேண்டாம் என ஒதுக்கித் தள்ளியது. அதன் காரணமாக பாதிக்கப்பட்டது இராமேசுவரம் பகுதி மீன்பிடித் தொழிலும் தொழிலாளர்களும்தான். கிட்டத்தட்ட 15 நாட்கள் படகுகள் மீன்பிடிக்கச்செல்லவில்லை.

இப்படி பலமுறை நடந்தும் இன்றும் அந்நிய ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏஜெண்டுகளான தரகு கம்பெனிகளைச் சார்ந்தே மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது.

உலகின் பெரிய சந்தைகளில் ஒன்று என்ற காரணத்தால் பல ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய கம்பெனிகளும் தங்களது தயாரிப்புகளை இங்கு வந்து விற்று, கொள்ளைலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு என்னவென்றால் நம்நாட்டுத் தேவையையோ, சந்தையையோ கவனிக்காமல் தரகு கமிசன் ஒன்றை மட்டுமே பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு நமது மக்களை பட்டினி போடுகின்றனர்.

ஏற்றுமதி என்பது நமதுதேவைக்குப் போக எஞ்சியிருப்பதைச் செய்வது என்று இருக்க வேண்டும். ஆனால் இந்திய அரசோ இந்திய சந்தையை ஏகாதிபத்திய நாடுகளுக்கு திறந்து விட்டுவிட்டு அவர்களுக்குத் தேவையான பொருட்களை மட்டும் உற்பத்தி செய்து கொடுக்கும் அடிமைகளாக இங்குள்ள தொழில்துறைகளை வைத்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய அடிமைத்தனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து விடக் கூடாது என்பதற்காகவே மீன்பிடித்தொழிலாளர்களுக்கு அவர்கள் அன்றாடம் பிடிக்கும் இறால் அளவு அதிகரிப்பிற்கு ஏற்றவாறு பேட்டா என்ற பெயரில் சன்மானம் கொடுக்கின்றனர்.

இந்த சன்மானம் அதிகம் பெற வேண்டும் என்பதற்காகவே தொழிலாளர்களும் எல்லைதாண்டிச் சென்று தங்கள் உயிரையும் பணயம் வைத்து இறால் பிடித்துவருகின்றனர். இறால் பிடிப்பின் அளவின் அதிகரிப்புடன் பேட்டா இணைக்கப்பட்டுள்ளதால் மீன் பிடித்தொழிலாளர்கள் இலங்கை மக்களுக்குச் சொந்தமான இறாலை நாம் பிடிக்கின்றோம் என்பதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அதுபோல் உள்ளூர் நாட்டுப்படகு மீனவர்கள் கடலில் விரித்து வைத்திருக்கும் வலைகளின் மீது தங்களது விசைப்படகை ஓட்டிச்சென்று நாசப்படுத்தி நாட்டுப்படகு மீனவரின் வயிற்றிலடிக்கின்றனர்.

மேலும் நாட்டுபடபடகு மீனவர்களின் மீன்பிடிப்பு முறை என்பது வளர்ந்த மீன்களை மட்டுமே சேதமில்லாமல் பிடித்து உள்ளூர் மக்களது தேவையை பூர்த்தி செய்வது என்று இருக்கிறது. ஆகவே அதற்கேற்றவாறு அவர்களது வலை உள்ளது.

ஆனால் விசைப்படகு மீனவர்கள் பயன்படுத்தும் வலை மீன்குஞ்சுகளையும் சேர்த்து அரித்துக் கொண்டு வரும்படி உள்ளது. இதன் காரணமாக இந்திய, இலங்கை கடல்களமும் பாதிப்படைகிறது. இங்கு மீன்பிடி முறை என்பது 2000 ஆண்டுகளுக்கு முந்தைய பின்தங்கிய கட்டுமரம் மூலமாக மீன்பிடித்தல் என்பதில் துவங்கி நாட்டுபடகு, வல்லம், லாஞ்ச் என்ற நவீன முறை வரை அனைத்து முறைகளும் இன்றும் நிலவுகின்றன.

கட்டுமரம், நாட்டுப்படகு, வல்லம் என்ற முறைகளுக்குப் பிறகு எந்திரப்படகு என்பது நமது உள்நாட்டு மீன் தேவை அதிகரிப்பை பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதல்ல. மாறாக ஏகாதிபத்தியங்களின் இறால் தேவைக்காக அவர்களது தொழில் நுட்பத்தில்



படிப்பகம்

தயாரானதே வாஞ்ச் என்ற எந்திரப்படகாகும். இந்த எந்திரப்படகுகளும் போதாது என்று இன்று வெசல் என்ற சிறிய மீன்பிடிக் கப்பல்களையும் இறக்குமதி செய்துள்ளனர்.

www.padippakam.com

கட்டுமரம், நாட்டுபடகு என்ற பின்தங்கிய மீன்பிடி சாதனங்களை மறுதளித்து எந்திரப்படகு உள்நாட்டிலேயே தயாராகாததாலும், இவற்றில் கிடைக்கும் கனவாய், சங்கு போன்றவையும் ஏகாதிபத்தியங்களுக்குத் தேவைப்படுகின்ற காரணத்தாலும் ஒட்டுமொத்த மீன்பிடித் தொழிலும் ஏகாதிபத்திய வலைப்பின்னலில் சிக்கியுள்ளது. மேலும் கட்டுமரம், நாட்டுபடகு, லாஞ்ச் என்ற அனைத்து கருவிகளின் உரிமையாளர்களிடமும் ஏகாதிகத்தியங்களுக்கு சேவை செய்யும் தரகுத்தனமும் வளர்க்கப்படுகிறது.

இந்த தரகு உற்பத்திதான் ஒட்டுமொத்த மீன்பிடித் தொழிலின் நெருக்கடிக்கே காரணமாகும்.

இத்தகைய நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் மீன்பிடித் தொழில் சரியான திசையில் வளர செய்யப்படவேண்டியதென்ன? ஒட்டு மொத்த மீன்பிடித் தொழிலையும் உள்நாட்டுச்சந்தையை மையமாக அதாவது நமது நாட்டு மக்களின் உணவுத் தேவையை மையமாகக் கொண்டு செயல்படுவதாக மாற்றியமைக்க வேண்டும். நமது தேவை போக மிஞ்சும் உபரி மீனை பிறநாட்டுத்தேவைக்குப் பயன்படும் விதத்தில் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

கட்டுமரம், நாட்டுப்படகு, வல்லம் போன்றவற்றை ஆழம் குறைவான கடல் பகுதியில் மீன்பிடிக்கச் செய்தும், லாஞ்ச் போன்றவற்றை ஆழம் கூடிய பகுதிகளிலும் மேலும் ஆழமான பகுதிகளில் வெசல் போன்ற அதிநவீன முறைகளையும் மீன்பிடிக்க பயன்படுத்த வேண்டும். ஆனால் இவை அனைத்துமே உள்நாட்டு மக்களின் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.

இதுபோக மீன்பிடிக்கப்பயன்படும் வலையும் கடல்வளத்தைப் பாதிக்காதவாறு மேலும் நவீனப்படுத்தப்பட்டுப் பயன்படுத்த வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இன்றைய அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் மீனவத்தொழிற் சங்கங்கள் எவையும் இவ்வாறு சிந்திக்கத் தயாராயில்லை. மாறாக தரகு மீன்பிடித் தொழில் தொடர்ந்து நடக்கவும் அதில் நெருக்கடி ஏற்படும் போது அந்நேரங்களில் நஷ்ட ஈடுகேட்டு அரசாங்கத்திடம் வாங்கிக் கொடுப்பதுடன் நின்றுவிடுகின்றனர்.

வாஞ்ச் உரிமையாளர்களால் தொழிலாளர்கள் பேட்டா என்று ஆசை காட்டப்பட்டு இலங்கை கடல் எல்லை புகுந்து இறால் பிடித்து தரகு வியாபரிகளை கொழுக்க வைக்கின்றனர். அவ்வாறு கடல் எல்லை தாண்டும் போது இலங்கைகடற்படையால் மீனவத் தொழிலாளர்கள் சுட்டுக் கொள்ளப்படும் போது சிங்கள கடற்படையின் அராஜக நடவடிக்கை என்று இனவாதம் பேசி உண்மைக குற்றகாளிகளான வாஞ்ச் உரிமையாளர், தரகு வியாபாரிகள், ஏற்றுமதி செய்யும் தரகு கம்பெனிகள், ஏகாதிபத்தியம் ஆகியவர்களை நமது பார்வையில் படாமல் மறைத்து காப்பாற்றி வருகின்றனர்.

மேலும் அதிக இறால் பிடிப்பிற்காக அதிக பேட்டா வாங்கும் தொழிலாளி அப்பணத்தை முழுவதும் பிராந்திக்கடையில் விட்டுவிடுவதால்தான் இங்கு பிராந்திக்கடைகள் அதிக தொகைக்கு ஏலம் போகின்றன. இவ்வாறு இறுதியில் இம்மீன்பிடித்தொழிலால் அதிகம் பாதிக்கப்படுவது மீன்பிடித் தொழிலாளிகளும் சாதாரண மக்களும்தான். அதே சமயம் அதிக லாபம் பெறுவதோ ஏகாதிபத்தியம், தரகு வியாபாரி, வாஞ்ச் உரிமையாளன் மற்றும் அவனுக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் (கந்து) வட்டிக்காரன் ஆகியோரே.

இவர்களால் சீரழிக்கப்படும் தொழிலாளி வர்க்கத்தை அச்சீரழிவுக்கு எதிராகப் பயிற்றுவித்து, சீரழிவிலிருந்து விடுவிப்பதன் மூலமே மீன்பிடித்தொழிலை நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான தரகுச்சக்திகளை எதிர்த்த போராட்டத்தில் அணிதிரட்ட முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

1. தங்கள் புதிய தடம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. ராமேஸ்வரம் மேலும் ஒரு இதழைத் தந்துள்ளது. அதுவும் தரமாக எனும்போது மகிழ்வே அடைகிறேன். சங்குத் தொழில் குறித்து எம்மைப் போன்றவர்கள் அறிய முடியாத செய்திகளைத் தந்துள்ளீர்கள். திரை விமர்சனம் இரண்டுமே மிகச்சரியாக விமர்சிக்கப்பட்டுள்ளது. கூர்மையான பார்வையோடு அலசியிருக்கிறீர்கள். நல்ல நூல் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளீர்கள். பிணம் கவிதையில் இன்றைய சூழல் சிந்திக்க கேள்வி விதைத்துள்ளது. முதல் இதழ் என்றாலும் செறிவாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. சமூக தளங்கள் அனைத்தும் விமர்சனத்திற்கு உள்ளாக வேண்டிய கட்டாயத்தில் அதைச் சரியாகச் செய்ய புதிய தடம் பதித்துள்ளது வரவேற்கத்தக்கது. வாழ்த்துக்கள்.

-தி.மா. சரவணன், திருச்சி.

2. புதிய தடம் கிடைத்தது. மகிழ்ச்சி. இதழின் வடிவம், உள்ளடக்கம் சிறப்பாக உள்ளது. ஒரே நெருடல் எழுத்துப் பிழைகள். வருங்காலம் நேர்செய்யும் என நம்புகிறேன். நல்ல முயற்சி.

தலையங்கம் எரிதான. நெருக்கடிகளின் நிர்ப்பந்தத்தால் இதழ் வருகிறது. நீங்கள் முன்வைக்கப்போகும் தீர்வுகள் என்ன? எந்தத் தத்துவத்தை, கண்ணோட்டத்தை எந்த அளவில் சார்ந்தது என்பதனையும் விளக்கியிருக்கலாம். இலக்கோடு இருக்கும் இதழுக்கு இது தேவை.

இரண்டு திரை விமர்சனங்கள் இதழின் அதிக இடங்களைப் பிடித்திருக்கிறது. விமர்சனங்கள் வேண்டும். அதற்காக ஒவ்வொரு படத்தையும் விமர்சிக்க வேண்டியது முக்கியமல்ல. திரை உலகின் சீரழிவுகளை ஒரே ஆய்வுக்கட்டுரையில் எழுதலாம். மக்களிடம் அதிகமாகப் பேசப்படும் குறிப்பிட்ட படங்களை மட்டும் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். இதைவிடவும் சிற்றிதழ் தளத்தில் நூல் விமர்சனமும், அறிமுகமும் பயனளிக்கும்.

கவிதைகளில் மேகவண்ணனின் முதல் கவிதையும், கிருஷ்ணன் அவர்களின் கவிதையும் நல்ல படைப்புகள். தொடர்க. நன்றி.

-தீபன், ஆர்க்காடு.

3. தங்களது இதழ் மிகச்சிறப்பாக மனித நேயத்தை வலியுறுத்தி, அதிகார வர்க்கத்தை சாடுவது அறிந்தேன். இது ஒடுக்கப்பட்டவர்களுக்கான விழிப்புணர்வு ஆக்குவது.

புதிய தடம் கவிதை, கட்டுரைகளோடு, சினிமா விமர்சனத்தை மிகச்சிறப்பான நோக்கில் கண்டு எழுதியிருப்பது தடம் பதிப்பதே. இதழ் நடத்துவதென்பது மிகவும் சிரமமானது. இருந்தாலும் அந்தச் சிரமத்தினை ஏற்றுத் தாங்கள் இதழ் நடத்துவது பாராட்டிற்குரியதே.

சினிமாவைத் தாங்கள் பார்த்து, விளக்குகிற, விவரிக்கிற கோணம் உயர்வானது. தொடர்க.

-பொள்ளாச்சி நசன், பொள்ளாச்சி.



படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் உங்களை
தோழர்கள் என்றழைத்தோம்
தவறுகளை
மிகத் தாமதமாய் உணர்கிறோம்.
நீங்கள் எங்களையும்
தோழர்கள் என்றழைத்தீர்கள்
தோள் தழுவிய ஒரு கை தவிர
உங்களின்
வேறொரு கை
துரோகத் துருப்பிடித்த
கத்திகள் கொண்டிருந்ததை
இப்போது உணர்கிறோம்.
மார்பில் காயம் தாங்குவதையே
வீரம் என்றுணர்கிறோம்.

முதுகில் குத்துவதையே
நீங்கள்
பாரம்பரியமாய்க் கொண்டிருக்கிறீர்கள்.

சமூக மாற்றம் என்கிறீர்கள்
கூத்தாடியைப் போல்
புலிவேஷம் கட்டுகிறீர்கள்
இத்தனை ஆண்டுகளாக
நீங்கள் ஆடிய ஆட்டத்தின்
பரிணாம வளர்ச்சியாக
உங்கள் மேடைகளில்
இன்று
ஹைர ஹைர ஹைரப்பா!
அடப்போங்கப்பா!!

*- மேகவண்ணன்,*



படிப்பகம்

வழக்கம் போல்
வீதிகள் தோறும்
மௌனம் சூழ்கிறது
அம்மாக்கள் சமையலறைகளிலும்
அப்பாக்கள் செய்திகளிலும்,
குழந்தைகள் பாபா ப்ளாக்ஷீப்புடனும்
வழக்கம் போல்
தெருமுனையில் கூடி
ஆய்கிறது இளைஞர் குழாம்,
சிம்ரனின் சிரிப்பு,
அசாருதீன் மீசை, விஸ்பர் விளம்பரம்,
அவள் வருவாளா என்பது பற்றியும்.
வழக்கம் போல்
பேருந்து நிலையங்களில்
பரபரப்பாய் குடிமக்கள்.
பான்பராக் குதப்பியும்
கௌரவமான பார்களில் குடித்தும்
மாமூல் கொடுத்தபடியும்
எயிட்ஸ் அறிவிப்பி ஏ படம்
வெறித்தபடியும்
வழக்கம் போல்
நகரமெங்கும்
திரட்டப்படுகின்றன செய்திகள்.
வெடிகுண்டு வதந்தி,
ஆட்சிக்கலைப்பு சோதிடம்,
அருள்வாக்கு, கும்பாபிஷேகம்
உலகம் அழியும் போன்ற
அறிவியல் கட்டுரைகளும்.
வழக்கம் போல்
புறநகர் சேரிகளில்
களைத்து உறங்குகிறார்கள்.
அவர்களுக்கென
வறுமை ஒழிப்புக் கூட்டங்கள்
தீர்மானம் நிறை வேற்றலாம்.
குடிசைகள் தீ வைக்கப்படலாம்.
நிதியமைச்சர்
காப்புரிமை ஒப்பந்தங்களில்
கையெழுத்துப் பழகலாம் - என்பதறியாமல்.



படிப்பகம்

## தோழர் கோ. கேசவன் அவர்களுக்கு செவ்வணக்கம்

www.padippakam.com

இன்று அறிவு ஜீவிகள் மார்க்சிய - லெனினியத்தை மறுத்து ஓடிக் கொண்டிருக்கும் வேளையில் தனது வாழ்நாள் இறுதிவரை மார்க்சிய – லெனினியத்தை சமகாலப் பிரச்சினைகளுடன் இணைப்பதற்கு கடுமையாகப் போராடிய சிந்தனையாளர் தோழர். கோ. கேசவன் அவர்கள் கடந்த 17.09.98 அன்று திருச்சியில் காலமானார்.

அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து மேலும் முன்னேற உறுதியேற்போம்.

**பகிர்வு**
**சமூக விஞ்ஞானப் பயிலகம்,**
**தமிழ்நாடு.**

இன்றைய சமூகத்தில் வெளிப்பார்வைக்கு அடிமைத்தனம் இல்லை. ஆனால் சமூகத்தில் பெரும்பான்மையோர் பல்வேறுவிதமான அடிமைத்தளைகளால் கட்டுண்டு கிடக்கின்றனர். மனித உறவுகள் முழுமையிலும் ஏதேனும் ஒரு விதத்தில் அடிமைத்தனம் இருந்து வருகிறது. பெற்றோர் - பிள்ளை உறவு, கணவன் - மனைவி உறவு, சகோதரன் - சகோதரி உறவு என்பன போன்ற குடும்ப உறவுகளிலும் இது காணப்படுகிறது.

... அடிமைத்தனத்தில் மிக மிக மோசமானதும், ஆபத்தானதுமானது சிந்தனை ரீதியில் அடிமைத்தனத்தோடு இயங்கிப்போகும் சிந்தனை அடிமைத்தனமாகும்.

... அடிமைத்தனத்தை எவராலும் திடீரென நீக்கிவிட முடியாது. காலந்தோறும் இறுக்கமடைந்த குளத்தின் பாசியை ஒரு நாள் வெயில் உலர்த்திவிடாது. இதற்கு நீண்ட காலப் போராட்டம் தேவை.

**-கோ. கேசவன்**
அடிமைகள் முன்னுரையில்.



படிப்பகம்

தங்களது
கருத்துக்கள்
விமர்சனங்கள்
கட்டுரைகள்
கவிதைகள்
வரவேற்கப்படுகின்றன.

**புதிய தடம்**

விடுதல்

"புதிய தடம்"

மேகவண்ணன்
28B, லெட்சுமண தீர்த்தம் தெரு,
இராமேஸ்வரம் - 623 526.




PRINTED BOOKS
AIR MAIL

சேரல் SAMAR
87. RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
- SEINE
FRANCE

www.padippakam.com
படிப்பகம்